**செய்தி வெளியீடு எண் : 670** **நாள்: 25.04.2022**

## செய்தி வெளியீடு

**நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு பயிற்சி-மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் துவக்கி வைத்து உரை.**

---

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலைத்துறை பயிற்சி வளாகத்தில் இன்று (25.4.2022), நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு பயிற்சியினை தொடங்கி வைத்து உரையாற்றினார்கள்.

பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் "பயிற்சி என்பது தொழில் சார்ந்த நுணுக்கங்களைக் கற்றுக் கொடுக்க, ஏற்கனவே அத்தொழிலில் திறன் பெற்றவர்களால் வழங்கப்படும்". தகவல் அல்லது திறன் பரிமாற்றம் ஆகும். பயிற்சி வழங்கப்படுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும், குறிப்பிட்ட நோக்கம் உள்ளது. அந்த நோக்கம் தரமேம்பாடு. "தரமே நெடுஞ்சாலைத்துறையின் தாரக மந்திரம்" என்று கூறினார்கள்.

பணி தொடர்பான விதிமுறைகள், வழிகாட்டுதல்கள், பணியின் மூலம் தனிநபரும் சமூகமும் அடையும் பயன்கள், பணியில் எதிர்கொள்ளும் சவால்கள், முந்தைய ஆளுமைகள் குறித்த அறிமுகங்கள் ஆகியன இப்பயிற்சியின் முக்கிய பொருளாகும்.

**"உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர் சொரிந் தற்று"**

-என்று வள்ளுவர் பயிற்சி அளிப்பதன் பயனை 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தெரிவித்துள்ளார். உணர்ந்து கொள்ளக்கூடிய, ஆற்றல் உள்ளவர்களின் முன்னிலையில் பேசுதல் என்பது "வளரக்கூடிய பயிர் உள்ள பாத்தியில் நீர் பாய்ச்சுவது போலப் பயன் விளைவிக்கும்" என்று வள்ளுவர் பெருந்தகை குறிப்பிட்டுள்ளார் என்று கூறினார்கள்.

இங்கே பயிற்சி பெறுவதற்கு அனைத்து வசதிகளும் உள்ளன. இரண்டு தளங்கள் கொண்ட 46,000 சதுரடி பரப்பிலான கட்டடம் உள்ளது. 40 பொறியாளர்கள் பயிற்சி பெறத்தக்க அளவில் 4 வகுப்பறைகள் உள்ளன. 25 பேர் கலந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள, நவீன வசதிகள் கொண்ட சிறு மாநாட்டு கூடம் உள்ளது. நவீன வசதிகள் கொண்ட கூட்ட அரங்கம், கணினி வசதிகளுடன் கூடிய நூலகமும் உள்ளது. இந்த வசதிகளையெல்லாம் பயன்படுத்தி பொறியாளர்கள் நிறைவான பயிற்சி பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

"சாலைப் பாதுகாப்பே உயிர் பாதுகாப்பு" என்பதால், சாலைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் 400 பொறியாளர்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில் தற்பொழுது வரை 202 பொறியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி மையத்திற்கு நிபுணர்கள் அடங்கிய ஒரு வழிகாட்டும் குழு அமைக்கப்படுகிறது. அந்தக்குழுவில்,

1. அரசு முதன்மைச் செயலாளர்.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்.
3. முதன்மை இயக்குநர், சாலை மேம்பாட்டுத் திட்டம்.
4. சிறந்த ஆராய்ச்சி நிலையங்களின் பிரதிநிதிகளும்
5. கட்டுமானத் தொழில் நிறுவனங்களின் மூத்த

பொறியாளர்களும் இடம் பெற்றிருப்பார்கள்.

40 பொறியாளர்கள் பங்கு பெறும் இந்த பயிற்சியில் சாலை அமைப்பதில் உள்ள வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தரக்கட்டுப்பாடு போன்ற கூறுகளை விரிவாக பொறியாளர்களுக்கு பயிற்றுவிக்கப்படும்.

இந்த ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு இத்துறையில் பணியாற்றும் பொறியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் பல்வேறு தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

தகுதிவாய்ந்த அனைத்து பொறியாளர்களும் இப்பயிற்சியைப் பெற்று துறையின் பெருமைகளை உயர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பயிற்சி துவக்க விழாவில் நெடுஞ்சாலைத்துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் திட்ட இயக்குநர் திரு.பா.கணேசன் இ.ஆ.ப., முதன்மை இயக்குநர் பி.ஆர்.குமார், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் திரு.ரெ.கோதண்டராமன் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in